**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 126/2024**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரவீன் குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முனியப்பன்** | **Calling** | : | |
| **Village** | : | **பெரிய பள்ளபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **23** |
| | | | **Dated** | : | **03.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**All accued present. Both side counsels present.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 6 ), திரு. **பிரவீன் குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லோடு மேன் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பெரிய பள்ளபட்டி மாரியம்மன் கோவில் திருவிழாவிற்காக காவல்நிலையத்திற்கு சென்று இருந்தேன். போலீசார் அப்போது என்னிடம் இந்த கையெழுத்தை வாங்கி கொண்டனர். அது Ex. P3.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 18.08.2021ம் தேதி பெரிய பள்ளபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி அருகே கொலை முயற்சி வழக்கிற்காக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் என் முன்னிலையிலும், பார்தீபன் என்பர் முன்னிலையிலும் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு நாங்கள் சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டு விட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.04.03 18:51:03 +0530